சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் பொருத்துநர், மின்பணியாளர்கள் மற்றும் மின் உதவியாளர்கள் பணியிடங்களுக்கான பணியிடங்களின் பெயரை மாற்றி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 24

நாள்: 23.02.2011

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 234, நிதி (ஊ.கு) துறை, நாள் 01.06.2009.
2. அரசாணை (நிலை) எண். 338, நிதி (ஊ.கு) துறை, நாள் 26.8.2010.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் ந.க.எண். 76901/2010/இ2, நாள் 27.12.2010.

----

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அலுவல் குழு 2009ன் பரிந்துரையின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதில் முரண்பாடுகள் இருப்பின் அதனை களைய ஒருநபர் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அரசுத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தொழில்நுட்ப பதவிகளில் ( Technical Categories [Trade posts] ) அரசாணை (நிலை) எண். 234, நிதி (ஊ.கு) துறை, நாள் 01.06.2009ல் ரூ.5200–20200 + ரூ.1900 தர ஊதியம் என ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட கிரேடு II பணியாளர்களின் பணியிடத்தின் பெயரை Skilled Assistant Grade II என பெயர் மாற்றம் செய்தும், அவர்களுக்கு ரூ.5200–20200+ரூ.2000 தர ஊதியம் என நிர்ணயித்தும் ரூ.4800–10000 +ரூ.1300 தர ஊதியம் மற்றும் 3 நிலை ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்ட இதர தொழிற்நுட்ப பணியிடங்களின் (other trade posts) பெயரை Unskilled என பெயர் மாற்றம் செய்தும் அவர்களுக்கு ரூ.5200–20200+ரூ.1900 தர ஊதியம் என நிர்ணயித்தும் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் மின் பணியாளர்கள், பொருத்துநர்கள் மற்றும் மின் உதவியாளர்கள் ஆகியோர் பின்வரும் விபரப்படி பணிபுரிகின்றனர் என்றும்,

| | |
|---|---|
| பொருத்துநர்கள் | – 193 நபர்கள் |
| மின்பணியாளர்கள் | – 86நபர்கள் |
| மின் உதவியாளர்கள் | – 22 நபர்கள் |
| மொத்தம் | – 301 நபர்கள் |

..2

இவர்களில் மின்பணியாளர் பணியிடங்களுக்கும், மின் உதவியாளர்கள் பணியிடங்களுக்கும் அரசாணை (2டி) எண். 57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 15.09.2009ல், 31.12.2011 வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், இப்பணியிடங்களின் தேவை முடியும் போது அல்லது தொடர்புடைய பணியாளர் நிரந்தரமாக இப்பணியிடத்தில் இல்லாத நிலை உருவாகும் போது மறையக்கூடிய பணியிடமாக கருதப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பொருத்துநர் பணியிடங்கள் அரசாணை (நிலை) எண். 84, ஊரக வளர்ச்சி (திட்டம்3) துறை, நாள் 5.5.98–ல் மறையும் பணியிடங்களாக உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மின்பணியாளர், பொருத்துநர் மற்றும் மின்உதவியாளர் பணியிடங்களுக்கான பெயரை பின்வருமாறு மாற்றம் செய்யுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

| தற்போதைய பதவியின் பெயர் | மாற்றம் செய்யப்பட வேண்டிய பணியின் பெயர் | அலுவலர் குழு 2009 பரிந்துரைப்படி பெறும் சாதாரண நிலை ஊதியம் | ஒரு நபர் குழு பரிந்துரைப்படி ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| மின் பணியாளர்<br>பொருத்துநர் | Skilled Assistant Grade II (குனித் திறன் வாய்ந்த உதவியாளர் நிலை II) | ரூ.5200–20200+ ரூ.1900 தரஊதியம் | ரூ.5200 –20200 + ரூ.2000 தர ஊதியம் |
| மின்உதவியாளர் (Helper) | Unskilled (குனித் திறன் அற்ற உதவியாளர்) | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | ரூ.5200 –20200 + ரூ.1900 தர ஊதியம் |

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த பின்னர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மின்பணியாளர், பொருத்துநர் மற்றும் மின்உதவியாளர் பணியிடங்களின் பெயரை பின்வருமாறு மாற்றம் (redesignate) செய்து அரசு ஆணையிடுகிறது.

| தற்போதைய பணியிடத்தின் பெயர் | அப்பதவியின் மாற்றப்படும் பெயர் |
|---|---|
| மின் பணியாளர் (Electrician)<br>பொருத்துநர் (Fitter) | Skilled Assistant Grade II (குனித் திறன் வாய்ந்த உதவியாளர் நிலை II) |
| மின்உதவியாளர் (Helper) | Unskilled Assistant (குனித் திறன் அற்ற உதவியாளர்) |

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண் 10124/ஊ.பி/2011, நாள் 18.02.2011ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை –15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் (சென்னை நீங்கலாக)
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை–15
இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள், சென்னை –15

<u>நகல்</u>
நிதி (ஊ.வ) துறை / நிதி (ஊ.பி) துறை, சென்னை–9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

கா. சிறுவணை 23/2/2011
பிரிவு அலுவலர்